| GYS 4233 | மீன்பிடியும் சமுத்திர வள முகாமைத்துவமும் (Fisheries and Marine Resource Management) | நேரம் 03 Hrs. |
|---|---|---|

- பகுதி – I இல் உள்ள முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும், பகுதி – II இல் இருந்து எவையேனும இரு வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக நான்கு (04) வினாக்களுக்கு விடை தருக.
- பொருத்தமான இடங்களில் விளக்கப்படங்களின் துணையுடன் விடையளிக்குக.
- எழுத்துக்கள், படங்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
- உலகப் புறவரிப்படம் வழங்கப்படும்.

## பகுதி - I

1) பின்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக.

அ. சமுத்திர உயிரிகளில் 'நெக்டன்கள்' (Nekton in sea organism)

ஆ. எக்மன் சுழற்சி (Ekman's spiral)

இ. 'கோஸ்ட் மீன்பிடி' (Ghost fishing)

ஈ. வெப்பநீர் வெளிவிடு துவாரங்கள் (hydro thermal vent)

உ. சந்திரனின் 'அபோஜி', 'பெரிஜி' நிலைகள் ('Apgi' & 'Perigi' positions)

ஊ. பிரத்தியேக பொருளாதார வலயமும் சூழல் மாசாக்கல் தடை வலயமும் (EEZ & pollution prevention zone)

எ. நீர் மேல் எழுகை (upwelling)

ஏ. உவர்ப்பியம் என்றால் என்ன?

ஐ. நாரா நிறுவனத்தின் பணிகள்

ஒ. சுனாமிப் பேரலைகள்

(2.5x10=25 புள்ளிகள்)

2) அ. உலகப்படத்தில் வட அத்திலாந்திக் நகர்வு, கிராண்ட் பாஸ், ஐஸ்லாந்து, வடகடல், கினிவளைகுடா, பெரு-சிலி நீரோட்டம், நியூபவுண்லாந்து, நடு அத்திலாந்திக் மலைத்தொடர் ஆகியவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(08 புள்ளிகள்)

ஆ. சமுத்திரங்களின் தோற்றம் பற்றி வெளிவந்த கருத்துக்களை நுணுக்கமாகப் பரிசீலிக்குக.

(17 புள்ளிகள்)

3) அ. சமுத்திர உயிரினங்களின் வகைகளைப் பாகுபடுத்தி, அதன் சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக் கூறுக.

(10 புள்ளிகள்)

ஆ. சமுத்திரங்களில் மேற்குறித்த உயிரினங்களுக்கிடையிலான இடைத்தொடர்புகளின் படிமுறையினை எடுத்துக்காட்டி, இவற்றில் முதனிலை உற்பத்தியாக்கிகளின் பங்கினை மதிப்பிடுக.

(15 புள்ளிகள்)

## பகுதி - II

4) உலகின் பிரதான மீன்பிடி வலயம் ஒன்றினைத் தெரிவுசெய்து, அப்பகுதியில் மீன்பிடித்தொழிலுக்கு சாதகமாக அமைந்த சமுத்திரவியல் மற்றும் பண்பாட்டுக் காரணிகள் பற்றி ஆராய்க.

(25 புள்ளிகள்)

5) இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளிலிருந்து மீன்பிடிக்கு பிரசித்திபெற்ற இரு பகுதிகளைக் குறிப்பிட்டு அவற்றின் மீன்பிடிக்கைத்தொழில் விருத்திக்கு சாதகமான புவியியல் காரணிகள் பற்றி விளக்குக.

(25 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றினுள் எவையேனும் இரண்டினிற்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.

அ. இலங்கையின் மீன் ஏற்றுமதிக்கான ஐரோப்பிய யூனியனின் தடையினால் ஏற்பட்ட தாக்கம்.

ஆ. மரபுவழி மீன்பிடி முறைகள்

இ. மிகவை – தாழ்வை வற்றுப்பெருக்கு

(2.5x10=25 புள்ளிகள்)